உ.

தர்க்கசங்கிரகம்.

என்கின்ற

வடமொழிக்கிரந்தம்

காஞ்சீபுரம்

இராமகிருஷ்ண சாஸ்திரியாரால்

தமிழில்

மொழிபெயர்க்கப்பட்டு,

இந்துவித்தியாசபைக்குதவியாகிய

புரசபாக்கம

பாலபோதகவித்தியாசாலைச் சபையாரால்,

வித்தியாவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

சாலீ: ௲எ௱ரு-

இங்கி - ௲அ௱சுக.

இதன்விலை - அணா -



உ

தர்க்கசங்கிரகம்,



கடவுள்வணக்கம்.

விசுவேசனை மனையில்வைத்து, குருவந்தனஞ்செய்து, இளைஞர்கட்கெளிதில்விளங்கும்பொருட்டு, தர்க்கசங்கிரகஞ்செய்யப்படுகின்றது.

திருவியம், குணம், கர்மம், சாமாந்நியம், விசேடம், சமவாயம், அபாவம், ஆகிய ஏழு பதார்த்தங்கள்.

அவற்றுள் திருவியங்கள், பிருதிவி-அப்பு-தேஜஸ் வாயு - ஆகாசம் காலம்-திக்கு-ஆத்மா-மனம்-ஆகியஒன்பதுமேயாம்.

உரூபம்-இரசம் கந்தம்-பருசம் - எண்-பரிமாணம் - வேறாகவிருக்கை - ஸம்யோக

ம் - விபாகம் பரத்துவம் - அபரத்துவம் - குருத்துவம் - திரவத்துவம் - ஸ்நேகம் - சப்தம் - புத்தி - சுகம் - துக்கம் - இச்சை - பகை - பிரயத்னம் - தர்மம் - அதர்மம் - ஸம்ஸ்காரம் - ஆகிய - ௨௪ - ம், குணங்கள்.

எடுத்தல் - படுத்தல் - சுருக்கல் - நீட்டித்தல் - செல்லல் ஆகும் பேதத்தால் ஐந்து கர்மங்கள்.

பரம் - அபரம் - எனச்சாமாந்நியமிருவகைத்து.

நித்தியதிருவியங்களிலிருக்கின்றவைகள் விசேடங்கள் - அவைகள் - அநந்தங்கள்.

சமவாயமென்பதொன்றே

அபாவம் - நான்குவகைத்து - பிராகபாவம் - பிரத்துவம்ஸாபாவம் - அத்தியந்தாபாவம் - அந்நியோந்நியாபாவம் - என.



அவை [illegible] கந்தமுடையது பிருதிவி - அது [illegible] ருவகைப்படும் - நித்தியமெனவும் அநித்தியமெனவும் [illegible] - நித்தியம்பரமாணுரூபம் - அநித்தியங்காரியரூபம் - [illegible] இந்திரியம் - விஷயமென [illegible] ல [illegible] பிரத்தியக்ஷ [illegible] புணர் [illegible] - அப்பு [illegible] - [illegible] மெனவும் [illegible] [illegible].

[illegible] இந்திரியம் [illegible] - விஷயம் - நதி - கடல் முதலியன.

வெப்பயுஷ்ணஸ்பரிசமுடையது [illegible] - அது இரு

வகைத்து நித்தியமநித்தியமெனா - நித்தியம் பரமாணுரூபம் - அநித்தியம் காரியரூபம் - பின்னும்மூவகைத்து சரீரேந்திரியவிடயபேதத்தால் - சரீரம் சூரியலோகத்திற்பிரசித்தம் - இந்திரியம் உருவத்தைக் கிரகிக்கத்தக்கது - நேத்திரம் - அஃது கருவிழிமுனையிலிருக்கின்றது - விடயம் நாலுவகைத்து - பௌமம் திவ்வியம் ஔதரியம் - ஆகரசம் என்னும்பேதத்தால் - பௌமம் நெருப்பு முதலிய - திவ்வியம் மின்னன் முதலிய - அஃது நீராட்பற்றியது. புசிக்கப்பட்டவன்னத்தைச்சமார்த்தற்குக்காரணமாயிருக்கிறது ஔதரியம் - ஆகரசுவர்ணம் முதலிய

உருபமின்றிப்பரிசமுடையது வாயு - வெப்பமுமு குளிர்ச்சியுமின்றிப் பரிசமுடையதெனவுங் கூறுவர் அஃது இருவகைத்து நித்தியமநித்தியமெனா - நித்தியம் பரமாணுரூபம் அநித்தியம் காரியரூபம் - பின்னும்மூவகைத்து சரீரேந்திரிய விடய பேதத்தால் - சரீரம் வாயுலோகத்திற் பிரசித்தம் - இந்திரியம் பரிசத்தைக் கிரகிக்கத்தக்கது - அஃது துவ

க்கிகளைப்பெயர்ப்பெறும் - சரீரமுழுதிலும்
வியாபித்திருக்கும். விடபம் - மரமுதலியவ
ற்றையசைக்கக்காரணமாகவிருக்கு மது - சரீ
ரத்துக்குள்ளே சஞ்சரிக்கும் வாயு பிராணனாம் அஃ
தொன்றாயிருந்தும் உபாதிபேதத்தால் பிராண
னபான முதலியவைந்து பெயர்களைப் பெறுகின்றது.


சப்தத்தைக் குணமாகவுடையது ஆகாச
ம் - அஃதொன்றாயும் விபுவாயும் நித்திய
மாயுமிருக்கின்றது.

“சென்றது” என்பது முதலிய வியவகா
ரத்திற்குக் காரணமாயிருப்பது காலம் - சக
லத்திற்குமாதாரமாயிருப்பது காலமெனவு
ங்கூறுவர் - அஃதொன்றாகியும் விபுவாகியும
நித்தியமாகியுமிருக்கின்றது.

கிழக்குமுதலிய வியவகாரத்திற்குக் கார
ணமாயிருப்பது திக்கு - அஃதுமொன்றாகியு
ம் விபுவாகியுநித்தியமாகியுமிருக்கின்றது.

ஞானத்திற் கிருப்பிடம் ஆத்மா - அவ்விரு வகைப்படும் பரமாத்மா - ஜீவாத்மாவென. அவ ற்றுள் ஈச்வரன் [illegible] ஸர்வக்ஞனாயிருக் கின்ற பரமாத்மா ஒன்றே - ஜீவாத்மா அநந் தசரீரந்தோறும் வெவ்வேறாக விருக்கின்றது - விபுவாயும் நித்யமாயுமிருக்கின்றது.

சுக - முதலியவைகளை [illegible] காரணமான இந் த்ரியம் [illegible] - ஒவ்வோராத்மாவுக்கு [illegible] [illegible] - அணுவடிவமா [illegible] [illegible] நித்யமாயுமிருக்கின்றது.



[illegible] த்தால் மாத்ரம் உணரப்படும் [illegible] [illegible] - [illegible] [illegible] - [illegible] சித்ரம் - [illegible] ஏழுவகைப்படும் [illegible] தேஜஸ் [illegible] - [illegible] - [illegible] பிருதிவியில் [illegible] - ஜலத்தில் [illegible] வெண்மை [illegible] - [illegible] வெண்மையே யிருக்கும்.

இரஸனேந்திரியத்தாலுணரத்தக்க குணம் இரசம்-அஃது இனிப்பு-புளிப்பு-உப்பு-உறைப்பு-கைப்பு-துவர்ப்பு-என்னும் பேதத்தால் அறுவகை [illegible] ளிப்பிருக்கு சலத தில் [illegible] அறுவகையுமு ள்ளது [illegible] ருக்கும்.

கிராணேந்திரிய [illegible] ரத்தக்க குணம் கந்தம்-அ [illegible] ம்-ஆக [illegible] மாத்திரமிருக்கும்.

பருசம்-துவக்கெந்திரிய [illegible] ருமமா [illegible] னரத்தக்க குணம்-அஃது [illegible] குளிர்ச்சி-வெப்பம்-குளிர்ச்சி வெப்ப ங்களின்மை என மூன்று பேதத்தால், அவற்றுள் குளிர்ச்சி ஜலத்தி [illegible] ருக்கும்-வெப்பம் தேயுவிலிருக்கும்-குளிர்ச்சி வெப்பங்களின்மை பிருதிவியிலும் வாயுவிலுமிருக்கும்.

உருபமுதலிய நான்கும் பிருதுவியிற் சமைத்தலாலுண்டாகும்- அவைகள் அநித்தியங்கள்- மற்றவைகளிலியல்பாகவேயுண்டாயிருக்குமாதலால நித்தியப்பொருளிலுள்ள

நித்தியம், அநித்தியப்பொருளிலுளது அநி
த்தியம்.

ஒன்றுமுதலியவழக்கிற்குக்காரணமாகவி
ருப்பதுஎண். அஃது எல்லாப்பொருள்களி
லுமிருக்கும் - ஒன்றுமுதல பரார்த்தத்வரை
க்குமுளது. ஒருமை நித்தியமாகியுமநித்திய
மாகியு மிருக்கும் - நித்தியப்பொருளிலுள
துநித்தியம் - அநித்தியப் பொருளிலுளது
அநித்தியம் - இரண்டுமுதலியவோவெவ்று
ல எங்கும அநித்தியந்தானே.

அளவெனும்வழக்கிற்கு நியாமகமாக்கா
ரணம்பரிமாணம் அஃதெல்லாப்பொரு
ளிலுமிருக்கும் - அணுவெனவும் - மகத்தெ
னவும் - நீட்சியெனவும் - குறுமையெனவும் -
நாலவகைத்து.

“வேறு” எனும்வழக்கிற் கின்றியமையா
க்காரணம் வேறாகவிருக்கை - எல்லாப்பொ
ருளிலுமுண்டு.

“கூடித்து” என்கிறவழக்கிற்குக் காரண

பிரிக்குங்குணம் ஸம்யோகம் - அதுவெல் லாம்பொருளிலுமுளது.

ஸம்யோகத்தை நசிப்பிக்குங் குணம் விபாகம் அதுவெல்லாப் பொருளிலுமுண்டு.

பரத்வம் அபரத்வம் - இவ்விரண்டும் பர அபர வழக்குகளுக் கசாதாரண காரணங்களாயிருப்பவை திக்கிருதபரத்வாபரத்வம் காலகிருதபரத்வாபரத்வம் - என இவைகள் இருவகைப்படும். ... தூரத்திலுள்ளதில் திக்கிருத பரத்வம் ... சமீபத்திலுள்ளதில் திக்கிருதா பரத்துவம் - முன்பிறந்தவனிடத்தில் கால கிருதபரத்துவம் - பின்பிறந்தவனிடத்தில காலகிருதாபரத்துவம்.

முன்விழுதற்கு அசமவாயிகாரணமாயிரு ப்பது குருத்துவம் அது பிருதிவியிலும் ஜலங்க ளிலிருக்கும்.

முன்பெருகுதற்கு அசமவாயிகாரணமா

யிருப்பது திரவத்துவம் - இஃது பிருதிவியிலும் ஜலத்திலும் தேஜஸிலுமிருக்கின்றது - இயர்கையானதெனவும் சேர்க்கையானதெனவும் இருவகைத்து - இயர்கைத்திரவத்துவம் ஜலத்திலிருக்கின்றது - சேர்க்கைத்திரவத்துவம் பிருதிவியிலும் தேஜஸிலுமிருக்கின்றது - பிருதிவியில் - நெய் முதலியவற்றில் நெருப்பின் சேர்க்கையால் திரவத்துவமுண்டாகின்றது - தேஜஸில் - பொன் முதலியவற்றிலும் அப்படியேகொள்க.

நூல்முதலியவைகள் பிண்டமாவதற்குக் காரணமாயிருக்குங்குணம் ஸ்நேகம் - அஃது ஜலத்திலமாத்திரமிருக்கின்றது.

செவியாலுணரத்தக்க குணம் சப்தம் - அஃது ஆகாசத்திலமாத்திரமிருக்கும் - துவநியாத்மகம் வர்ணாத்மகமென இருவகைத்து - துவநியாத்மகசப்தம் - பேரிமுதலியவற்றிலுண்டாவது - வர்ணாத்மகம் - ஸம்ஸ்கிருதமுதலியபாஷைகளின் சப்தம்.

ஸகலவியவகாரத்திற்குங் காரணமாயிருப்பது புத்தி - அஃது ஞானமெனப்படும் - அப்புத்தி ஸ்மிருதியெனவும் அநுபவமெனவும் இருவகையாம் - முன்னுணர்ச்சியாற் ஞாபகத்தினாலுண்டாகும் ஞானம் ஸ்மிருதியெனப்படும் - அதுவல்லாத ஞானம் அநுபவமெனப்படும். அஃது இருவகைத்து - யதார்த்தம் - அயதார்த்தமென. அதுதன்மையுடைப் பொருளில் அத்தன்மையை அநுபவம் யதார்த்தம் - அதுதன்மையில்லாப் பொருளில் அத்தன்மையை அநுபவம் அயதார்த்தம்.

யதார்த்தாநுபவம் - பிரத்தியக்ஷம் - அநுமிதி - உபமிதி - சப்தம் - என்னும் பேதத்தால் நாலுவகையாம். அதற்குக்காரணமும் பிரத்தியக்ஷம் அநுமானம் உபமானம் சப்தமென நாலுவகையாம். இன்றியமையாக்காரணமே கரணமாம் காரியத்திற்கு நியதமாய் முன்னிருப்பதுகாரணம் - காரியமாவது பிராகபாவத்திற்குப்பிரதியோகி - அல்லதுஎதிரிடை.

காரணம் - சமவாயி - அசமவாயி - நிமித்தமெனும் பேதத்தாலமூவகைத்து.

எதனோடுகூடியதாகக் காரியமுண்டாகிறதோ அது சமவாயிகாரணம்.

உதாரணம் - படத்திற்கு நூல்கள்போலவும் படத்தின் உருபமுதலியவற்றிற்குப்படம்போலவும்.

காரியத்தின் தன்மையிலேயாவது காரணத்தின் தன்மையிலேயாவது ஒருபொருளிற்கூடியிருக்கும் காரணம் அசமவாயிகாரணம்.

உதாரணம் - படத்திற்கு நூல்களின் சேர்க்கை போலவும் - படத்தின் உருபத்திற்கு நூல்களின் உருபம் போலவும்.

அவ்விரண்டுமல்லாத காரணம் நிமித்த காரணம்.

உதாரணம் - படத்திற்குத் தறி தூரி * முதலியன்வகள் போல.

இம்மூன்று காரணங்கட்குள் இன்றியமையாத காரணமெதுவோ அதுவே கரணமெனப்படும். ஆதலால் பிரத்தியக்ஷ ஞானத்திற்குக் கரணம் பிரத்தியக்ஷமே.

* தூரி. நெய்யுங்கருவி.

இந்திரியத்திற்கும் பொருளுக்கும் உண்டாகும் சம்பந்தம் இந்திரியார்த்த ஸந்நிகர்ஷம். அதனாலுண்டாகும் அறிவுபிரத்தியக்ஷமெனப்படும். அஃது இருவகைத்து நிர்விகல்பகம் ஸவிகல்பகமென.

பிரகாரமின்றிதோற்றுமறிவு நிர்விகல்பகம்.

உதாரணம்- இஃதொருபொருள். *

பிரகாரத்தோடுதோற்றுமறிவு ஸவிகல்பகம்.

உதாரணம் இவன் டித்தன்-இவன்பிராமணன் - இவன்கரியவன்.

பிரத்தியக்ஷஞானத்திற்குக்காரணமாயிருக்கும் இந்திரியார்த்தஸந்நிகர்ஷம் அறுவகைத்து- ஸம்யோகம்-ஸம்யுக்தஸமவாயம்-ஸம்யுக்தஸமவேதஸமவாயம்-ஸமவாயம்-ஸமவேதஸமவாயம்-விசேஷணவிசேஷ்யபாவமென.

கண்களுக்குக்குடம் பிரத்தியக்ஷமாகும்போது- ஸம்யோகமெனும் ஸந்நிகர்ஷம்.

குடத்திலுள்ளரூப பிரத்தியக்ஷமாகும்போ

* தன்மைவிளங்காதுணர்த்தல்.

து ஸம்யுக்தஸமவாயமெனும் ஸந்நிகர்ஷம்- ஏனெனில நேத்திரேந்திரியத்தோடு கூடிய குடத்தில ரூபம் ஸமவாயமாதலால.

ரூபத்திலுள்ள தன்மைமுதலானவை பிரத்தியக்ஷமாகும்போது ஸம்யுக்தஸமவேதஸமவாயம்- நேத்திரேந்திரியத்தோடு கூடிய குடத்தில்- ஸமவேதரூபத்தில் தன்மை ஸமவாயமாதலால்.

செவிக்குச் சப்தம்பிரத்தியக்ஷமாகும்போது ஸமவாயஸந்நிகர்ஷம்- செவியில இரந்திராகாசமிருக்கும் ஆகாசமே இந்திரியமாதலாலும்- சப்தம் ஆகாசத்தின் குணமாதலாலும்- குணத்திற்கு குணிக்கும் ஸமவாயமாதலாலும்.

சப்தத்திலுள்ள தன்மை பிரத்தியக்ஷமாகும்போது ஸமவேதஸமவாயம்- செவியில ஸமவேதமாயிருக்கும் சப்தத்தில சப்தத்தின் தன்மை ஸமவாயமாதலால்.

அபாவம்பிரத்தியக்ஷமாகும்போது விசேஷண விசேஷ்யபாவமெனும் ஸந்நிகர்ஷம்.

இவ்விடத்தில குடத்தின் அபாவமிருக்கின்றது எனும்போது நேத்திரேந்திரியத்

தோஷத்தோடொக்க அவவிடத்தில் குடத்தின் அபா
வம் விசேஷியமாகத் தோன்றுகையாலும்
அயவிடம் குடத்தின் அபாவத்தையுடைய
து என்று போது நேத்திரேந்திரியத்தோ
டொக்க அயவிடத்தில் குடத்தின் அபாவ
ம் விசேஷணமாகத் தோன்றுகையாலும்
ஸந்நிகாஷ [illegible] அறு [illegible]
த்தியக்ஷமென்ப [illegible] னக்காரண-
அநந்தரக்க [illegible] பரியமெய்யுமபுல
னை [illegible] ராத்தியக்ஷமான [illegible]
ருக்கனென் [illegible]
வைமை [illegible] ப்படுகின்றன.



அநுமிதிக்குக் காரணமாகவிருப்பது அநு
மானம் - பராமர்சத்தினாலுண்டாகுமறிவு அநு
மிதி - பர்வதத்தில் வியாப்தியோடுகூடி
பக்ஷதர்மதையின் அறிதல் - ஒப்பிதப்
வா றிவு அடமலை நெருப்பை வியாப்பிய
மாகவுடைய புகையையுடையதெனுமறிவு -
இதுவே பராமர்சம் - அதனால் பருவதத்திலும்
றிவு எனப்படும் - அவ்வறிவினாலுண்டாகும்
மலை நெருப்புடையதெனுமறிவு அநுமிதி - எங்

சேபகையிருக்குமோ அங்கே நெருப்பிருக்குமென்பது வியாப்தியெனப்படும் - வியாப்தியையுடைய மலைமுதலியவற்றிலிருப்பது. அஃது பக்ஷதாமத்தின்தன்மையெனப்படும்.

அநுமாநம் இருவகைத்து - சுவார்த்தம் - பரார்த்தமென - தனக்கு அநுமிதிக்குக்காரணமாகவிருப்பது சுவார்த்தம் - அஃதெவ்வாறெனின் - ஒருவன் அடுக்களைமுதலிய விடங்களில் அடிக்கடிப்பார்த்ததனால் - தானே வியாப்தியையுடையவனாய் மலைசமீபத்தருகே சென்று அவ்விடத்தில் நெருப்பிருப்பதாகச் சந்தேகமுற்று - பின்பு - நெருப்பின் வியாப்தியையுடைய புகையுண்டு மலையிலேயென்றறிவு அவனுக்குண்டாகின்றது - இஃதே லிங்கபராமர்சமெனவுங் கூறப்படும். அதினின்றும் மலை நெருப்புற்றதெனவுமறிவாகிய அநுமிதியுண்டாகின்றது - சுவார்த்தாநுமாநமிவ்வாறறியப்படுக.

ஒருவன் தானே புகையால் நெருப்பை

வநுமமித்து மற்றொருவனைக் குறித்து தெரியும் பொருட்டு பஞ்சாவயவவாக்கியங்களையுரைப்பான் - அந்த பரார்த்தானுமானமெனப்படும்.

அதெப்படியெனில் - மலைநெருப்புடையது - புகையுடைமையால - புகையுடையவிதெதுவோ அது நெருப்புடையது அடுப்பங்கரைபோல - இதுவும் அப்படியே - ஆதலாலப்படி - என்று ... குறிப்பால பிறனுக்கும் நெருப்பை அறிவிக்கிறான்.

பிரதிக்ஞை - ஹேது - உதாரணம் - உபநயம் - நிகமனம் - எனப்படுவன பஞ்சாவயவங்கள்

மலைநெருப்புடையது - என்பது பிரதிக்ஞை - புகையுடைமையால என்பது ஹேது - புகையுடையதெதுவோ அதுநெருப்புடையதடுப்பிற்போல் என்பது உதாரணம் - இதுமப்படியே என்பது உபநயம் - ஆதலாலப்படி என்பது நிகமநம

ஸ்வார்த்தானுமிதி - பரார்த்தானுமிதி - இவை ஈ ...க்கு - லிங்கபராமர்சமேகாரணமாதலால்லி

ங்கபராமர்சம் அநுமானமெனப்படும்.

இலிங்கமூழவகைத்து அந்வயவியதிரேகி- கேவலாந்வயி- கேவலவியதிரேகி -என.

அந்வயத்தினாலும் வியதிரேகத்தினாலும் வியாப்தியுடையது - அந்வயவியதிரேகி -எப்படியெனில் -சாதிக்கப்படுமக்கினியில புகையுடைமைபோல.

ஆதலால் எவ்விடத்திில்புகையுண்டோ அவ்விடத்திலநெருப்புண்டு- அட்டிற்போல என்பது-அந்வயவியாப்தி.

எங்கேநெருப்பிராதோ அங்கே புகையிராது பெருமடுபோலென்பது வியதிரேகவியாப்தி.

அந்வயத்தைமாத்திரம் வியாப்தியாகவுடையதுகேவலாந்வயி - எப்படியெனில் குடம்பெயருககு விஷயமானது -தோற்றத்திற்குவிஷயமாதலால்- படம்போல -இவ்விடத்தில் தோற்றத்திற்கும் பெயருக்கும் விஷயங்களாக விருக்கின்றவைகடகு வியதிரேகவியாப்தியிலலை- ஏனெனில் எல்லாப் பொருள்களும் தோற்றத்திற்கும் பெயரு

களுடைய விஷயமாகுமாதலால்

வியதிரேகத்தைமாத்திரம் வியாப்தியா கவுடையது கேவலவியதிரேகி-எப்படி எனில் பிருதிவி மற்றவைகளைக்காட்டிலும் வேறு கந்தமுடையதால்- யாதொன்று மற்றவைகளைக்காட்டிலும் வேறாகாதிருப்பது எதுவோ அது கந்தமுடையதல்ல- தண்ணீர் போல இங்கப்படியல்ல ஆதலால் அப்படியல்ல என்னுமிடத்து - கந்தமுடையது மற்றவைகளைக்காட்டிலும் வேறென்கிற அந்வயதிருஷ்டாந்தமில்லை- ஏனெனில் பிருதிவிமாத்திரம் பக்ஷமாதலால்.

பக்ஷமென்பது சந்தேகமானசாத்தியத்தையுடையது- எப்படியெனில் புகையுடைமை காரணமாக அக்கினியுள்ள மலையானது போல்.

நிச்சயிக்கப்பட்டிருக்கும் சாத்தியத்தையுடையது சபக்ஷமெனப்படும் - அட்டிற் போல என்பது

நிச்சயிக்கப்பட்டிருக்கும் சாத்தியத்தின் இன்மையுடையது - விபக்ஷம் - பெருமடு போல என்பது

ஸவ்வியபிசாரமென்றும் விருத்தமென்றும் ஸத்பிரதிபக்ஷமென்றும் அசித்தமென்றும் - பாதிதமென்றும் ஹேத்வாபாஸங்களைந்து.

ஸவ்வியபிசாரமென்பது அநேகாந்திகம் பலவிடத்திருக்குமென்பது.

அஃது மூவகைத்து-ஸாதாரணம்- அஸாதாரணம் அநுபஸம்ஹாரியெனும் பேதத்தால்.

சாத்தியத்தின்மையுடையதிலிருப்பது ஸாதாரணம்-எப்படியெனில்-மலைநெருப்புடையது- தோற்றத்தகுந்தன்மையுடைமையாலென்புழி-தோற்றத்தகுந்தன்மைநெருப்பில்லாத பெருமடுவிற் கூடவிருப்பதால்.

சகலஸபக்ஷவிபக்ஷங்களிலும் வியாபித்திராமை அசாதாரணம்- எப்படியெனில்-சப்தம் நித்தியம் சப்தத்தன்மையாலென்புழி சப்தத்தன்மைஎல்லா நித்தியாநித்தியப்பொருள்களினின்றும்விலங்கி சப்தத்தில்மாத்திரமிருக்கின்றது.

அந்வய வியதிரேக திருஷ்டாந்தமற்றது அநுபஸம்ஹாரி - எப்படியெனில் - எல்லாம் அநித்தியமதோர் றப்படுந் தன்மையாலென் பதி எல்லாம் பக்ஷமாகலின் திருஷ்டாந்தமில்லை.

ஸாத்தியா பாவத்தில் வியாபித்திருக்கும் ஹேது - விருத்தஹேது - எப்படியெனில் சப்தம் நித்தியம் - செயப்படு தன்மையால் என்பது - செயப்படுதன்மை நித்தியத்தன்மையலாத அநித்தியத்தன்மையோடுகூடியது - எப்படியெனில் - எது செயப்படுதன்மையுடையதோ அது அநித்தியமெனப்படுகின்றது.

சாத்தியாபாவசாதகமாகிய வேறுகாரணமுளது ஸதபிரதிபக்ஷம் - எப்படியெனில் சப்தம் நித்தியம் - கேழ்க்கப் படுந்தன்மையால - சப்தத்தன்மைபோலவென்பது ஹேதுவல்ல - ஏனெனில் சப்தம் அநித்தியம செயப்படு தன்மையால் குடம்போல எனப்படுவதால்.

அஸித்தம் மூவகைத்து ஆச்சிரயாஸித்த மெனவும் சுவரூபாஸித்தமெனவும் வியாப் பிய த்துவாஸித்தமெனவும்.

ஆச்சிரயாஸித்தங் காட்டப்படுமெனில் - வான த்தில் பூத்ததாமரை கந்தமுளது - தாமரைத் தன்மையால - குளத்திலுள்ள தாமரையைப்போ ல என்புழி - வானத்திலுள்ள தாமரை பக்ஷம் - ஆச சிரயம்; அஃதில்லையாதலின் ஆச்சிரயாஸித்த மாயிற்று.

சுவரூபாஸித்தங் காட்டப்படுமெனில் - சப்த மானது குணம் - கண்ணிற்கு விஷயமாதலா ல் என்புழி கண்ணிற்கு விஷயமாதலை சப்தத் திலில்லை - ஏனென்னில் அதற்குச் செவிக்கு வி ஷயமாகவுண்டாதலால - இது சுவரூபாஸி த்தமாயிற்று.

உபாதியோடு கூடியது வியாப்பியத்து வாஸித்தம் உபாதியென்பது சாத்தியம்வி யாபகமாயும் சாதனம் அவ்வியாபகமாயுமி ருப்பது.

சாத்திய வியாபக மெனபது, சாத்தியத்

கோடு கூடியிருப்பதின் அக்நியந்தாபாவத் தின் [illegible] [illegible] ஸ்யோகித்துவம்.

சா[illegible]யாபக[illegible] [illegible]து - சாதனத்தோ [illegible] [illegible]ருப்ப[illegible]ல் அ[illegible]யந்தாபாவப்பிரதி யோ[illegible] [illegible] [illegible]ல - ம[illegible]புகை யை பது [illegible] புகையையுடையது எனப்படு - [illegible] ருபாருவி[illegible] சோகமைக உபாதி - புகையி ருக்குமிடத்[illegible] [illegible]றவிலவ் சேர்க்கையிருக்கு [illegible]மென சாத்[illegible] வியாபகத் [illegible]யாயுள்ளு- [illegible] நெருப்புடை[illegible] அங்கேயெல்லாம் [illegible]ரத்திற் சேர்க்[illegible]யில்லை - இருப்பதுண்டில் [illegible]ரவிறகிற் சேர்[illegible]கையி[illegible] மையால - இவ்விக மாகசாத்தியவ்யாபகமாய்சாதனவ்யாவி யாபகமாதலிற் [illegible]ரவிற[illegible] [illegible] [illegible] கைக - உபா தி - உபாதியுடன் கூடிய[illegible] [illegible] [illegible]ருப்புடை மை - வியாப்பியத்துவாசித்தம்.

எவ்விடத்தில் சாத்தியாபாவம் பிரமாண ந்தரத்தினாலே நிச்சயிக்கப் படுகிறதோ அதுபாதித மெனப்படும் - எப்படியெனி ல் - நெருப்பு வெப்பமற்றது - பொருளின் தன்மையால் என்புழி வெப்பமின்மைசா

த்தியம் - அதன் அபாவம் - வெப்பதன்மை - பருசப்பிரத்தியக்ஷத்தினால் கிரகிக்கப்படுகின்றமையால் பாதிதமாயிற்று.

அநுமானம்ஸமாப்தம்.



உபமிதிக்குக் காரணமாயிருப்பது உபமானம் - இரு[illegible]பொருளுக்கும் ச[illegible]ர்த[illegible]முணர்[illegible] அறிவு உபமிதி - அதற்குக் காரணமாயிருப்பது சாதிருசியவுணர்ச்சி - எப்படியெனில் - ஒருநாகரிகபுருஷன் கவயமென்னும் பதத்தின் பொருளறியாமல் வநசஞ்சாரியால் கவயம் மாடுபோன்றதெனக் கேள்வியுற்று - காட்டிற் சென்று அந்தவாக்கியத்தை நினைந்து மாட்டின்சாதிருசியத்தோடு கூடியபொருளைக் காண்கின்றான் - பின்பு - இதுதான் கவயபதப்பொருளென்கிற உபமிதி உண்டாகின்றது.

ஆப்தவாக்கியம் சப்தமெனப்படும். ஆப்தன் யதார்த்தஞ்சொல்லுகிறவன் - வாக்கியம் என்பது சொற்களின்திரள் - கோல்கொ

ங்றிவெள்ளைப்பசுவையோட்டிவா என்பது போல.

சக்திபுளது பதம் - அல்லது சொல்லெனப்படும் - சக்தியென்பது இவ்வொலியால் அப்பொருளவிளங்கத் தக்கதென்று கடவுளாலிடப்பட்டகுறியாம்.

விருப்பு - உரிமை - ஒவ்வல் - இம்மூன்றும் வாக்கியத்தின் பொருள் விளங்குதற்குக்காரணமாம்.

விருப்பென்பது மற்றொருபதத்தினால் விளைவப்படும் பொருள் விளக்குந் தன்மை.

பொருளிற்குப்பாதகமில்லாமை-உரிமை எனப்படும்.

ஒவ்வலென்பது விளம்பமின்றிச் சொற்களையுச்சரித்தல்.

விருவிற் கொய்வாத வாக்கியம் பிரமாணமல்ல பசுகுதிரைபுருஷன் யானையென்பது போல - இதில விருவில்லை.

நெருப்பால் நனை என்கிறவாக்கியமும்பிரமாணமல்ல - உரிமையின்மையால்.

ஓரியாமத்திற்கோர் தரம்ஒவ்வொருசொல்லாகப் பசுவைக்கொண்டுவாவென வெவ்வேறுகவுரைக்கப்படும்பதங்களையுடைய வாக்கியமும்பிரமாணமல்ல - ஒவ்வுதலின்மையால்

வாக்கியமிருவகைத்து - வைதிகம் லௌகிகமென - வைதிகமென்பது ஈசுவரனாற்சொல்லப்பட்டதாதலின் முழுதும் பிரமாணம். லௌகிகமென்பதில் ஆப்தவாக்கியம் மாத்திரம்பிரமாணம் - மற்றது பிரமாணமல்ல.

வாக்கியப்பொருளின் விளக்கமென்பது - சாப்தபோதம் - அதற்குக்காரணம் சப்தம். ஙயதார்த்தாநுபவ முரைக்கப்பட்டது.

அயதார்த்தாநுபவம்மூவகைத்து - சம்சயம் விபரியயம்தர்க்கமெனும் பேதத்தால்.

ஒருதன்மையில் விரோதமான பலதன்மையுளவாகக்கொள்ளுமறிவு சம்சயம் எனப்படும்-எப்படியெனில் -மனிதனோ கம்பமோ வென்பதுபோல.

பொய்யறிவு - விபரியய மெனப்படும்

முத்துச் சிப்பியி னிடத்தில் வெள்ளியெனுந்தோற்றல்போல.

வியாப்பியத்தை யேற்றி யதனால் வியாபகத்தைப் புகட்டல் தர்க்கம - எபபடி யெனில மலையில நெருப்பிலலா விடினும்புகையு மிலலையெனபதுபோல.

ஸ்மிருதியு மிருவகைத்து - யதார்த்தம் அயதார்த்தமென - நினைக்கத்தக்க தன்மையாலுண்டாவது யதார்த்தம் நினைக்கத்தக்கதன்மை யில்லையாலுண்டாவது - அயதார்த்தம்.

சுகமென்பது - எல்லவர்க்கும் அநுகூலமாகத்தோற்றும் உணர்ச்சி

துக்கமென்பது - எல்லவர்க்கும்பிரதிகூலமாகத் தோற்று முணர்ச்சி.

இச்சையென்பது மனவிருப்பம் - ஆசை

பகையென்பது மனதின்கோபம்.

பிரயத்தினமென்பது-முயலுஞ்செய்கை.

தர்மமென்பது - விதிக்கப்படுங் கருமத்தினாலுண்டாகும் பயன்.

அதர்மமென்பது - விலக்கப்படுங்கருமத்தினாலுண்டாகுமது.

புத்தி முதலியவெண்குணங்களும் ஆத்துமா மாத்திரத்தி லிருக்குமவைகள் - நித்தியாநித்தியமெனும் பேதத்தாலிருவகையின.

ஈசுவரனுடையவை நித்தியம் - சீவனுடையவை யநித்தியம்.


ஸம்ஸ்காரம் மூவகைத்து - வேகம் - பாவனை - உண்மையை ஸ்தாபித்தல் என.

வேகம் பிரதிவிமுதலிய நான்கிலும் மனதிலுமிருக்கும்.

அநுபவத்தினாலுண்டாகி - நினைப்புக்கு ஹேதுவாயிருப்பது பாவனை - அஃது ஆத்

துமாவில்மாத்திர மிருக்கும்

வேறுவிதமாகியிருப்பதை மறுபடிமுன்னிருந்த தன்மை யுளதாகச்செய்வது உண்டையைஸ்தாபித்தலெனப்படும். இத்தன்மை பாய்முதலியபிரதிவியில்மாத்திர மிருக்கும்.



அசைவின்வடிவுகொண்டதுகருமம் - உயர்விடத்தைச் சேருதற்கு ஹேதுவாயிருப்பது எறிதல் - தாழ்விடத்தைச சேருதற்குஹேதுவாயிருப்பது படுதல - சரீரத்தைக்குறுகியிருப்பதற்கு ஹேதுவாயிருப்பது சுருக்கல் - விரிந்தவிடத்தைச் சேருவதற்குஹேதுவாயிருப்பது விரித்கல் - மற்றவையெல்லாம் செலவென்னப்படும் - இவை ப்பிருதிவிமுதலியநான்கிலுமிருக்கும்.

நித்தியமாயும் ஒன்றாயும் பலவையநுசரித்ததாயு மிருப்பது சாமாந்நியம் - இது திரவியகுண கருமங்களிலிருக்கும் - அது பரமெனவும் அபரமெனவும் இருவகையாயிருக்கும் - பரமென்பது சத்தை - அபரமென்பது திரவியத்தன்மைமுதலிய

நித்திய திருவியங்களி லிருக்கும் விசேஷங்களனந்தங்கள்.

நித்திய சம்பந்தம் சமவாயமெனப்படும்-அஃது ஒருகாலஞ்சேராமலும்சித்தமாயமிருப்பது. அயுதஸித்தசம்பந்தமெனப்படும். எவைகளுக்குளொன் றிரண்டையும் சித்தமாகச்சார்ந்திருக்கின் றதோ அவவிரண்டும் அயுதஸித்த சம்பந்தமுடையனவாகும்-எப்படியெனில் அவயவாவயவிகளும் - குண குணிகளும் - செய்கையுஞ்செய்கையுளதும்- சாதி வியக்திகளும - விசேஷநித்தியதிருவியங்களுந்தானே.

அநாதியாயும் அந்தமுளதாயுமிருப்பது-பிராகபாவம். அஃது காரியம் பிறப்பதற்கு முன்னுளது.

ஆதியோடுகூடி அந்தமுறுமலிருப்பது பிரத்துவம்சா பாவம். அஃது காரியப்பிறப்பிற்குப் பின்புளது.

அத்தியந்தா பாவமென்பது முக்காலத்தோடு கூடியிருக்கும் பொருளுககுப்பிரதி

யோகித் தன்மையுடையது. எப்படியெனில்
பூமியிற் குடமில்லை - யென்பதுபோல.

அதனுடு சம்பந்தத் தோடுகூடிய பிரதி
யோகித்தன்மையுடையது அந்நியோந்நியா
பாவம் - எப்படியெனில் - குடம் படமல்ல.



சகல பதார்த்தங்களும் சொல்லப்பட்ட
வைகளில் அடங்கியமையால் பதார்த்தங்கள்
ஏழே யென்பது சித்தம்.

தர்க்கசங்கிரகம்.

ஸம்பூர்ணம்.

இலக்கணம்.

சகலபதார்த்தங்களிற்கும் இலக்கணமுரை
த்துப்பிரதிபாதித்தலே தர்க்கமெனப்படுவ
தால்இலக்கணமித்தன்மையுடையதெனக்கூ
றவேண்டியது அகத்தியமாகக் காணப்படுகி
ன்றது.

இலக்கணத்திற் கிலக்கணமுரைப்பது நூ
ன்முறைமை யல்லாவிடினும் அஃதையொ
ருவாறுவிளங்கச் செய்யலாகின் றமையால்
தீபிகையெனும் கிரந்தத்தின் சிலவாக்கியங்

கள்மொழிபெயர்க்கப்பட்டு இதனடியில் விவரிக்கப் படுகின்றன.

இலக்கணமென்பது மூன்று தூஷணங்களு மில்லாத தருமமாம்.

அவ்வியாப்த்தி - அதிவாப்த்தி - அசம்பவம் என தூஷணங்கள் மூன்று.

எதைக்குறித்து இலக்கணமுரைக்கப்படுகின்றதோ - அது இலக்கியம்.

இலக்கியப் பொருளின் ஏகதேசத்திலின்மை - அவ்வியாப்த்தி - பசுவிற்குக் கருமையுடைமைபோல.

இலக்கியத்தன்மை யில்லாப்பொருளிலு மிருப்பது அதிவியாப்த்தி - பசுவிற்குக்கோடுடைமைபோல.

இலக்கிய முழுதிலு மில்லாமலிருப்பது அசம்பவம் - பசுவிற்கு ஒற்றைக்குளம்புடைமைபோல.

இம்மூன்று தூஷணங்களுமில்லாத தருமம் இலக்கணமெனப்படும் - இதுவே - அசாதாரணதர்மமெனவுங் கூறப்படும் - பசுவிற்கு ஸாஸநாதி * யுடைமைபோல.

* ஸாஸ்நை - அலைதாடி.